# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,145—1962 ජූනි 1 වැනි සිකුරාදා—1962.6.1

13,145 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு யூன் மாதம் 1 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. . | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 345 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாஜிஸ்திரேட்டுகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. . .. | 343 | " மதுவரிச்சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

இல. 34/2/11 (எசி)எல். டீ. பீ. 237/30.

### மரணச் சொத்து வரிக்கட்டளைச் சட்டம்

#### 79 ஆம் பிரிவின் கீழான ஒழுங்கு விதி

மரணச் சொத்து வரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 24) 79 ஆம் பிரிவின் கீழ் நிதியமைச்சரால் ஆக்கப்பட்டு, அப்பிரிவின் (4) ம் உட்பிரிவின் கீழ் செனேற்றுச் சபையாலும் பிரதிநிதிகள் சபையாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கு விதி.

கொழும்பு,
1962 ம் ஆண்டு மே மீ 21 ந உ.

பீலிக்ஸ் ஆர். டி பண்டாரநாயக்க,
நிதி அமைச்சர்.

#### ஒழுங்கு விதி

1961 ஒற்றோபர் (ஐப்பசி) 20 ஆந் தேதிய 12,726 ஆம் இலக்கக் கெசெற்றில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதியினால் கடைசியாகத் திருத்தியமைக்கப்பட்டபடியான 1944 யூன் 19 ஆந் தேதிய 9,284 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட 1944 ஆம் ஆண்டின் மரணச் சொத்து வரி (அரசாங்கக் கடன் பத்திரங்களை ஒப்படைத்தன் மூலம் கொடுத்துத் தீர்த்தல்) ஒழுங்குவிதிகள், அவற்றின் அட்டவணையில் இதனால் பின்வருமாறு மேலும் திருத்தியமைக்கப்படுகின்றன .—

(அ) 67 ஆம் விடயத்தினை நேரடுத்துப் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்த்துக் கொள்ளுதல் மூலமும் ; அத்தகைய ஒவ்வொரு விடயத்திலுமடங்கிய பல்வேறு விபரங்களும் அந்த அட்டவணையிலுள்ள ஏற்ற நிரைகளில் பின்வருமாறு பதியப்படுதல் வேண்டும் :—

" 68. சமநிலையில் வழங்கப்பட்ட " சி " தொடரிலுள்ள இலங்கை அரசாங்க $4\frac{1}{4}\%$ கடன் 1982-86, ........

69. சமநிலையில் வழங்கப்பட்ட " டி " தொடரிலுள்ள இலங்கை அரசாங்க $4\frac{1}{4}\%$ கடன் 1982-86, ........

70. சமநிலையில் வழங்கப்பட்ட " இ " தொடரிலுள்ள இலங்கை அரசாங்க $4\frac{1}{4}\%$ கடன் 1982-86, ........

71. சமநிலையில் வழங்கப்பட்ட இலங்கை அரசாங்க 3% கடன் 1964-66, ............

72. சமநிலையில் வழங்கப்பட்ட " எவு " தொடரிலுள்ள இலங்கை அரசாங்க $4\frac{1}{4}\%$ கடன் 1982-86, ........

(ஆ) பின்வரும் விடயத்தை விட்டு விடுதல் மூலமும், அத்தகைய விடயத்திலடங்கிய பல்வேறு விபரங்கள் அவ்வட்டவணையின் ஏற்ற நிரைகளிலிருந்து நீக்கிவிடப்படுதல் வேண்டும் :—

" 36. சமநிலைக்குக் குறைவாய் வழங்கப்பட்ட இலங்கை அரசாங்க $3\frac{1}{4}\%$ கடன் 1959-61 ........ 100. "

6-37.

நி. செ. இல. 79/20/27/விசி(11)

### குடிமதிப்புக் கட்டளைச் சட்டம்

குடிமதிப்புக் கட்டளைச் சட்டத்தின் (143 ஆம் அத்தியாயம்) 2 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சர் அவர்களால் ஆக்கப்பட்ட கட்டளை.

பீலிக்சு ஆர். டி. பண்டாரநாயக்கா,
நிதி அமைச்சர்.

கொழும்பு,
28.5,1962.

#### கட்டளை

இலங்கைவாழ் மக்களின் சமுதாய, குடியியல் பொருளாதார நிலைமையை ஆய்ந்தறியும் நோக்கமாக :

(அ) சனத்தொகை

(ஆ) வீட்டுவசதி

என்பன பற்றிய மதிப்பொன்று இலங்கை முழுவதிலும் ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தி மூன்றும் ஆண்டு எடுக்கப்படவேண்டும் என இத்தால் உத்தரவிடப்படுகின்றது.

6—263/1.

---

எம். டீ. இல.

நி. செ. இல. 79/20/27/விசி (11)

### குடிமதிப்புக் கட்டளைச் சட்டம்

குடிமதிப்புக் கட்டளைச் சட்டத்தின் (143 ஆம் அத்தியாயம்) 3 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சர் அவர்கள் 1962 ஆம் ஆண்டு யூன் மாதம் 1 ஆம் திகதியைக் கொண்ட 13,145 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையால் 1963 ஆம் ஆண்டு நடாத்தும் குடிமதிப்புக் கருமத்தை மேற்பார்வையிடும்படி, குடிமதிப்பு புள்ளிவிபர பதில் அதிபரான திரு. அல்லன் பசில் சாமுவேல் நேசராசா புள்ளைநாயகம் அவர்களை குடிமதிப்பு அத்தியட்சராக நியமித்துள்ளார்.

எச். எஸ். அமரசிங்கா,
நிதி அமைச்சரின் நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1962, மே 28 ஆந் தேதி.

6—263/2.

## வனபரிபாலனக் கட்டளைச் சட்டம்

வனபரிபாலனக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 451) 4 (2) ம் பிரிவினால் தம்மீது பொறுப்பிக்கப்பட்ட தத்துவங்களை கொண்டு விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சராலாக்கப்பட்ட கட்டளை.

சீ. பீ. டி சில்வா
விவசாய, காணி, நீர்ப்பாசன,
மின்சார அமைச்சர்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு மே மீ 15 ந வ.

### கட்டளை

நாரியகம மனுவங்கம வனஒதுக்கு என அழைக்கவும் வழங்கவும் படுவதும், 1893 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 8 ந் தேதிய 5,241 ம் இலக்க கசெற்றில் பிரசுரமான 21.8.1893 ம் தேதியைக் கொண்ட பிரகடனத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட வனம் ஒன்றாக அமைந்ததுமான காணியின், இதன் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள பாகம் இதன் தேதியிலிருந்து ஒதுக்கப்பட்டதாதல் ஒழிதல் வேண்டும்.

### அட்டவணை

வடமேல் மாகாணத்தில், சிலாபம் மாவட்டத்து, பிட்டிகல் கோரளை வடக்கின் முனேஸ்வரம்பற்று தெற்கினுள்ள மனுவங்கம கிராமத்தி லிருப்பதும் நிலஅளவை செய்து எவ். எஸ். பி. பி. 120 ல் 2 ம் 5 ம் துண்டுகளாக காட்டப்பட்டிருப்பதும் 107 ஏக்கர், 1 றூட் 32 பேர்ச் நிலப் பரப்பைக் கொண்டதுமான நாரியகம, மனுவங்கம வனஒதுக்கத்தின் பாகம்.

6-23

---

எல். சி

## வனபரிபாலனக் கட்டளைச் சட்டம்

வனபரிபாலனக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 451) 4 (2) ஆம் பிரிவினால் தம்மீது பொறுப்பிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சராலாக்கப்பட்ட கட்டளை.

சீ. பீ. டி சில்வா,
விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு மே மீ 12 ந வ.

### கட்டளை

கிரிண்டிகல்ல வன ஒதுக்கு என அழைக்கவும் வழங்கவும் படுவதும், 1937 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 5 ந் தேதிய 8,275 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரமான பிரகடனத்தின்மூலம் ஒதுக்கப்பட்ட வன துண்டு அமைந்துள்ளதுமான காணியின், இதன் அட்டவணையில் குறிக்கப் பட்டுள்ள பாகம் இதன் தேதியிலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டதாதல் ஒழித்தல் வேண்டும்.

### அட்டவணை

வடமேல் மாகாணத்து குருநாக்கல் மாவட்டத்தில் உள்ள கிரியாலே ஹூத்பத்துவவின் இகல விஸிதெக கோரளை மேற்கில் இருக்கும் பானகமுவை கிராமத்துக்குள்ளடங்கியிருக்கும் கிரிந்திகலே வன ஒதுக் கத்தின் பாகமாக அமைந்துள்ளதும் வடமேல் மாகாண இறுதிக் கிராம மாதிரிப்படத்தில் காணித்துண்டு 38 ஐ அடங்கியிருப்பதும் 2 ஏக்கர், 3 றூட், 30 பேர்ச். விஸ்தீரணமுள்ளதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான பனகமுவெமுகலாறு என வழங்கப்படும் நிலப்பரப்பு முழுவதும்.

வடக்கு : வடமேல் மாகாண இறுதிக் கிராம மாதிரிப்படம் 1169 இல் உள்ள காணித்துண்டு 39 ;

கிழக்கு : கிரிந்திகலேக் கிராம எல்லை ;

தெற்கும், மேற்கும் : வடமேல் மாகாண இறுதிக் கிராம மாதிரிப்படம் 1169 இல் உள்ள காணித்துண்டு 40.

6-64.

---

எல். டீ. —பீ. 77/33.

## முடிக்குரிய காணிக் கட்டளைச் சட்டம்

முடிக்குரிய காணிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 454) 63 (1) ம் பிரிவினால் என்மீது பொறுப்பிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, கமத்தொழில், காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர் சார்ல்ஸ் பேசிவல் த சில்வா ஆகிய நான், 1953 நவம்பர் 27 ம் தேதிய 10,616 இலக்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலே அதன் கண்ணுள்ள அட்டவணைக்குப் பதிலாகப் பின்வரும் புதிய அட்டவணையை இடுவதன் மூலம் இவ்வறிவித்தலினால் திருத்தியமைக்கிறேன்.

### அட்டவணை

" எல் 22/49-2 கிழக்கு, எல் 22/49-4 கிழக்கு என்னும் இலக்கங்களைக் கொண்ட களுத்துறை நகர் அமைப்பு மதிப்பு நிலவளவைத் தாள் களிலுள்ள 253 ம் நிலத்துண்டுக்குத் தெற்கே, மணல் மேடாகவுள்ள பாகத்தைத் தவிர்த்து, களுத்துறை நகரசபை நிருவாக எல்லைகளுக்குள் ளமைந்துள்ள கடற்கரையின் முழுப்பாகமும்."

சீ. பீ. டி சில்வா,
கமத்தொழில், காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர்.

கொழும்பு,
3.5.1962.

6-65.

---

## வனபரிபாலனக் கட்டளைச் சட்டம்

வனபரிபாலனக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 451) 4 (2) ஆம் பிரிவினால் தம்மீது பொறுப்பிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

சீ. பீ. டி சில்வா,
விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு வைகாசி மீ 3 ந வ.

### கட்டளை

தவற்றகொல் ஒதுக்கு என அழைக்கவும் வழங்கவும் படுவதும் 1937 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 5 ந் தேதிய 8,275 ஆம் இலக்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட 1937 பெப்ரவரி 17 ம் தேதியைக் கொண்ட பிரகடனத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட வன துண்டுக் அமைந்ததுமான காணியின், இதன் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள, பாகம் இதன் தேதியிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டதாதல் ஒழிதல் வேண்டும்.

### அட்டவணை

வடமேல் மாகாணத்திலிருக்கும் குருநாகல் மாவட்டத்து தம்பதெனி ஹூத்பத்துவிலுள்ள உடுகஹா கோரளை தெற்கிலிருக்கும் பரம உல்லா கிராமத்தில் அமைந்துள்ள தெவட்டகொல்லஹெனு என வழங்குவதும், 468 ம் இறுதிக் கிராம மாதிரிப்படத்து 2 ஆம் இலக்க குறைநிரப்பியில் காணித்துண்டு 73 (வன அளவைத் தொடக்க மாதிரிப்படம் 99 இன் காணித்துண்டு 1 இன் பாகம்) ஆக அமைந்துள்ளதும், 2 ஏக்கர், 0 றூட், 18 பேர்ச். விஸ்தீரணமுள்ளதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான நிலப்பரப்பு முழுவதும் :—

வடக்கு : இறுதிக் கிராம மாதிரிப்படம் 468 இல் உள்ள காணித்துண்டு இல. 47 எ ;

கிழக்கு : வன அளவைத் தொடக்க மாதிரிப்படம் 99 இல் உள்ள காணித்துண்டு இல. 1 ;

தெற்கு : வன அளவைத் தொடக்க மாதிரிப்படம் 99 இல் உள்ள காணித்துண்டு இல. 1 ;

மேற்கு : வன அளவைத் தொடக்க மாதிரிப்படம் 99 இல் உள்ள காணித்துண்டு இல. 1 ம் இறுதிக் கிராம மாதிரிப்படம் 468 இல் உள்ள காணித்துண்டு இல. 47 பி யும்.

6-71.

## இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்) அரசப் பேரவைக் கட்டளை, 1946

### வாக்காளர் இடாப்புக்கள் திருத்தியமைத்தல், 1962

1946 ம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்) அரசப் பேரவைக் கட்டளையின் 16 ம் பிரிவின்படி, 1962 ம் ஆண்டுக்குரிய வாக்காளர் இடாப்புக்கள் திருத்தியமைத்தல் ஆரம்பமாகிவிட்டனவென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. தற்சமயம் நடைமுறையிலிருக்கும் வாக்காளர் இடாப்புக்களின் பிரதிகள் அல்லது அவற்றின் பிரிவுகள் பதிவு உத்தியோகத்தர்களால் கீழ்க்காணும் கந்தோர்களில் பார்வைக்கு வைக்கப்படும் :—

| இடாப்புக்கள் அல்லது அவற்றின் பிரிவுகள் பார்வைக்கு வைக்கப் படும் கந்தோர் | பார்வைக்கு வைக்கப்படும் இடாப்புக்கள் அல்லது அவற்றின் பிரிவுகள் |
|---|---|
| (1) ரெஜிஸ்ருர்-ஜெனரல் கந் தோர் | இல. 1-கொழும்பு வடக்கு, இல. 2-கொழும்பு மத்தி, இல. 3-பொறளை, இல. 4-கொழும்பு தெற்கு, இல. 19-தெகிவளை-கல்கிசை ஆகிய தேர்தற் றெருகுதிகளுக்குரிய சம்பூர்ணமான இடாப்புகளின் பிரதிகள் |
| (2) கச்சேரி .. | அரசாங்க அதிபரின் நிர்வாகத்திலடங்கிய எல்லாத் தேர்தற் றெருகுதிகளுக்குரிய சம்பூரணமான வாக்காளர் இடாப்புக் களின் பிரதிகள் |
| (3) ஒவ்வொரு தலதாபன கந்தோரும் | தலதாபனப் பகுதிக்குள்ளிருக்கும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்க ளடங்கிய இடாப்பின் பிரிவு |
| (4) தபாற் கந்தோர் .. | தபாற் கந்தோர் இருக்குமிடத்திலுள்ள சம்மதிச் சீட்டிடும் பகுதிக்குரிய எல்லா வாக்காளர்களினதும் பெயர்களடங்கிய இடாப்பின் பிரிவு |
| (5) ஒவ்வொரு கிராமத் தலை மைக்காரரின் கந்தோர், (கச்சேரி யிருக்கும் ஏதா வதொரு பட்டினம், கொழும்பு மாநகரசபை தெகிவளை-கல்கிசை மா நகர சபை பகுதிகள் தவிர) | கிராமத் தலைமைக்காரர் பகுதியின் உள் ளடங்கும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்களடங்கிய இடாப்பின் பிரிவு |

3. இல. 1—கொழும்பு வடக்கு, இல. 2—கொழும்பு மத்தி, இல. 3—பொறளை, இல. 4—கொழும்பு தெற்கு, இல. 19—தெகிவளை-கல்கிசை ஆகிய தேர்தற் றெருகுதிகளில் உள்ள வாக்காளராகத் தகுதியுடைய ஒவ்வொருவரும் தமது பெயர் வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டிருக்கிறதா என்று ரெஜிஸ்ருர்-ஜெனரல் கந்தோரிலுள்ள இடாப்பை, கந்தோர் நேரத்தில், எப்பொழுதேனும் பரிசீலனை செய்தும் அல்லது சம்பந்தப்பட்ட தலதாபனக் கந்தோர் அல்லது தபாற் கந்தோரிலுள்ள குறிப்பிட்ட பிரிவைப் பரிசீலனை செய்தும் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம். மேலும் வேறேதேனுமொரு தேர்தற் றெருகுதியிலுள்ள வாக்காளராகத் தகுதியுடைய ஒவ்வொருவரும் தமது பெயர் வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டிருக்கிறதாவென்று சம்பந்தப்பட்ட கச்சேரியில் அல்லது சம்பந்தப்பட்ட தலதாபனக் கந்தோரில் அல்லது தபாற் கந்தோரில் அல்லது கிராமத் தலைமைக்காரர் கந்தோரிலுள்ள குறிப்பிட்ட பிரிவைப் பரிசீலனை செய்து நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.

4. வாக்காளர் இடாப்பை அல்லது அதன் பிரிவைப் பரிசீலனை செய்து தமது பெயர் அவ்விடாப்பில் பதியப்படவில்லையெனக் காணும் ஒவ்வொருவரும் அங்ஙனம் தமது பெயரை இடுவிக்கும்படி கீழ்க்காணும் முறையில் விண்ணப்பித்துக்கொள்ளலாம் :—

(அ) இல. 1—கொழும்பு வடக்கு, இல. 2—கொழும்பு மத்தி, இல. 3—பொறளை, இல. 4—கொழும்பு தெற்கு, இல. 19—தெகிவளை-கல்கிசை ஆகிய தேர்தற் றெருகுதிகள் தொடர்பாக :

(1) இவ்வறிவித்தலோடிணைக்கப்பட்டிருக்கும் மாதிரிப்பத்திரத்திற்கிணங்க 1962 ம் ஆண்டு ஜூன் மாதம் 29 ந் திகதிக்கு முன் ரெஜிஸ்ருர்-ஜெனரலுக்கு எழுத்து மூலம் விண்ணப்பித்தும், அத்துடன்

(2) பதியப்படுதற்குத் தகுதியுடைய எல்லாத் தகவல்களையும் கணக்கெடுப்பவரால் தமக்குக் கொடுக்கப்பட்ட விசேஷ பத்திரத்தின் மூலம் கொடுத்தும், இவ்வருடம் வாக்காளர் இடாப்புக்கள் திருத்தியமைத்தலின் பொருட்டு பதிவுக்குத் தகுதியுடையவரினதும், அல்லாதவரினதும் அல்லது இறந்துபோனவர்களினதும் பெயர்களை விசாரித்தறிய ஒவ்வொரு வீட்டுக்கும் வரும் கணக்கெடுப்பாளரிடம் அவ்விதத் தகவல்களைக் கொடுத்தும்,

(ஆ) மற்றும் தேர்தற் றெருகுதி சம்பந்தமாக—

(1) இவ்வறிவித்தலோடிணைக்கப்பட்டிருக்கும் மாதிரிப்பத்திரத்திற்கிணங்க 1962 ம் ஆண்டு ஜூன் மாதம் 29 ந் தேதிக்கு முன் அப்பகுதிக்குரிய பெரும்பாக இறைவரி உத்தியோகத்தருக்கு எழுத்துமூலம் விண்ணப்பித்தும்,

(2) பதியப்படுதற்குத் தகுதியுடைய எல்லாத் தகவல்களையும் கணக்கெடுப்பாளரால் தமக்குக் கொடுக்கப்பட்ட விசேஷ பத்திரத்தின் மூலம் கொடுத்தும், இவ்வருடம் வாக்காளர் இடாப்புக்கள் திருத்தியமைத்தலின் பொருட்டு பதிவுக்குத் தகுதியுடையவரினதும் அல்லாதவரினதும், இறந்துபோனவர்களினதும் பெயர்களை விசாரித்தறிய ஒவ்வொரு வீட்டுக்கும் வரும் கணக்கெடுப்பாளரிடம் அவ்விதத் தகவல்களைத் கொடுத்தும்,

5. இடாப்புக்கள் அல்லது அவற்றின் பிரிவுகள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள எக்கந்தோர்களிலும், விண்ணப்ப மாதிரிப் பத்திரங்கள் கிடைக்கும்.

ஈ. எப். டயஸ் அபேசிங்க,
பாராளுமன்றத் தேர்தல் அதிகாரி.

கொழும்பு, 31-5-62.

### வாக்காளர் பதிவு விண்ணப்பப் பத்திரம், 1962

ரெஜிஸ்ருர்-ஜெனரல் அவர்கட்கு,

————பெரும்பாக இறைவரி உத்தியோகத்தருக்கு,

———— ஆகிய நான் ———— தேர்தற் றெருகுதியில் ஓர் வாக்காளராகப் பதிவு செய்துகொள்ள இத்தால் விண்ணப்பித்துக் கொள்கின்றேன். எனது விண்ணப்பத்திற்கு ஆதாரமாகக் கீழ்க்காணும் விபரங்கள் தரப்பட்டுள்ளன :—

(1) முழுப் பெயர் : ————.

(2) விலாசம் : ————.

(3) வயது : ————.

(4) தேர்தற் றெருகுதியில் வாசஞ்செய்யத் தொடங்கிய தேதி, அங்ஙனம் வாசஞ்செய்த காலம் : ————.

————,
மனுதாரின் கையொப்பம்.

தேதி : ————.

6-1

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### பிரகடனம்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தீவுப்பிரிவில், அனலைதீவுப் பிரிவிலுள்ள கால்நடைகளிடையே " தொடை வீக்க " நோய் ஆரம்பித்திருப்பது காரணமாக, 1957 ம் ஆண்டின் 33 ம் இலக்க " தொற்றுநோய்கள் (விலங்குகள்) பிரமாணத் திருத்தச் சட்டத்தின் " கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தினாலும் குறித்த பிரமாணத்தின் (அத்தியாயம் 327) உட்பிரிவு 4, உப உட்பிரிவு (1) ன் விதிகளுக்கு அமையவும், அரசாங்க பிரதம மிருக வைத்தியரான ஆரியதாச அமரசிங்க ஆகிய யான், கீழ்க் குறித்த எல்லைகளுக்குள் அடங்கிய பிராந்தியத்தை ஒரு " தொற்றுநோய் பிரதேசம் " என்று பிரகடனப்படுத்துகின்றேன்.

வடக்கு : கடல் ;

தெற்கு : கடல் ;

கிழக்கு : கடல் ;

மேற்கு : கடல்.

இப்பிரகடனம் மறு அறிவித்தலால் நீக்கப்படும்வரை இப்பகுதியிலிருந்தும் இப்பகுதிக்கும் கால்நடைகள் அல்லது மாட்டுவண்டிகள் நடமாட்டத்தை நடத்துதல் ஆகாதென்று இதே பிரமாணத்தின் 7 வது உட்பிரிவின்கீழ் பிரகடனஞ் செய்கின்றேன்.

" தொற்றுநோய் " பிராந்தியத்திலுள்ளவர்கள் சட்டப்பிரகாரம் கையாளவேண்டிய செயற்பாடுகளை எடுத்துரைக்கும் 1937 ம் ஆண்டின் தொற்றுநோய் (விலங்குகள்) பிரமாணங்களை, கால்நடை உரிமையாளரும் மாட்டுவண்டிகள் உரிமையாளரும் தம் அவதானத்துக்கு எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். இப்பிரமாணங்களின் விரிவான தகவல்களை யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள மிருகவைத்தியரிடமிருந்தும் (ஊர்காவற்றுறை) தீவுப் பகுதி காரியாதிகாரியின் கனரியில் இருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

ஈண்டுப் பொறிக்கப்பட்ட தேதிமுதல் இப்பிரகடனம் செயல்முறைக்கு வந்துள்ளது.

ஆரியதாச அமரசிங்க,
அரச பிரதம மிருகவைத்தியர்.

கமத்தொழில் துணையதிபர் கனரி,
(விலங்குற்பத்தி-சௌக்கியம்)
கமத்தொழிற்றுறை,
பேராதனை, 22.5.1962.

6–68.

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

### அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரய விகிதங்கள்

## " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கசெற்) "

### வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மனி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல்வேண்டும்.

6. " நகலை " கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக " ரைப் " அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப் பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிரீம் கோட் புறொக்ரறுல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய ... ... ... | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி ... ... | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் ... ... ... | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் ... ... ... | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. **சந்தா விபரம் :**

அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு)

| | உள்ளூர் ரூ. | உள்ளூர் ச. | | வெளியூர் ரூ. | வெளியூர் ச. |
|---|---|---|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 22 | 50 | ... | 35 | 50 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு ... ... ... | 12 | 50 | ... | 18 | 0 |
| முதற் பகுதியின் இருபிரிவுகள் ... ... ... | 20 | 0 | ... | 28 | 0 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை சதம் | | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|---|
| (அ) (1) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 25 | ... | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் ஒவ்வொரு பகுதியும் ... ... | 50 | ... | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 10 | ... | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... | 20 | ... | 15 |

இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத் தொகையை, அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.